செய்தி வெளியீடு எண்: 329 நாள் : 09.07.2015

## செய்தி வெளியீடு

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஜீலை 2015 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 11.07.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 7/41,திருவேங்கடசாமி தெரு,புளியந்தோப்பு, சென்னை 600 012 (புளியந்தோப்பு காவலர் குடியிருப்பு அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 2/1, மணிகண்டன் 8வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21 (அண்ணா திருமணமாளிகை அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, நெ. 29, சோமையா ராஜா தெரு,அகரம் சென்னை 600 082 (அகரம் பெருமாள் கோயில் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மேல்நிலைப்பள்ளி, எண் 16, சுப்புராயன் தெரு, செனாய் நகர், சென்னை 600 030 (மாங்காளியம்மன் கோயில் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, எண். 1, பள்ளிக்கூடத்தெரு, செட்டியார் அகரம், துண்டலம், சென்னை – 600 077. (போரூர் டோல்கேட் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மாநகராட்சிபள்ளி, எண்.22/2 வடக்கு மாடவீதி, சிவன் கோயில் தெரு, வில்லிவாக்கம், சென்னை 600 049 (வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | எம் ஆர் எப் தொழிலாளர் சங்கக்கட்டிடம், 37, பட்டினத்தார் கோயில் தெரு, திருவொற்றியூர், சென்னை 600 019. (திருவொற்றியூர் மார்கெட் அருகில்) |
| 8 | ஆவடி | ஆதி திராவிடர் ஆரம்ப பள்ளி, பங்காரம் பேட்டை கிராமம்மோரை ஊராட்சி சென்னை – 600 055 (வீராபுரம் பேருந்து நிலையம் அருகில்) |
| 9 | தி.நகர் | ஒருங்கிணைப்பு குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையம்,பிருந்தாவன் தெரு குடிசைமாற்று வாரிய குடியிருப்பு வளாகம்,பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33. (ஸ்ரீதேவி ஜெயம்முத்து மாரியம்மன் திருக்கோயில் பின்புறம்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி கட்டிடம், எண் 115, எல்.பி.ரோடு, அடையார், சென்னை–20. (சென்னை மாநகராட்சி கட்டிடம் பின்புறம்) |
| 11 | பரங்கிமலை | நங்கநல்லூர், பழவந்தாங்கல் வியாபாரிகள் நல சங்க கட்டிடம்,(காமாட்சி திருமண மண்டபம்), நெ.7, வ.உ.சி தெரு, காந்தி நகர்,சென்னை– 600 091. (மூவரசன்பேட்டை குளம் அருகில்) |
| 12 | தாம்பரம் | ஏரிக்கரை பிள்ளையார் கோயில் எதிரில் , திருநீர்மலை மெயின்ரோடு, லட்சுமிபுரம், குரோம்பேட்டை, சென்னை –44. |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, 112, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை–15. (மேட்டுப்பாளையம் பஸ் நிலையம் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநலைப்பள்ளி, 88, தாணா தெரு,புரசைவாக்கம், சென்னை–7. (புரசைவாக்கம் மார்க்கெட் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண் 53, மேற்கு கூவம் ஆறு சாலை,சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2. (சிந்தாதிரிப்பேட்டை பேருந்து நிலையம் அருகில்) |
| 16 | சோழங்கநல்லூர் | செண்பகத்தம்மாள் திருமண மண்டபம், எண். 2, தெய்வசிகாமணி தெரு, பள்ளிக்கரணை, சென்னை–100. (சுராத்தமாள் கோயில் மற்றும் குளம் அருகில்) |

முதன்மை செயலாளர்/ ஆணையாளருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**